**பொது சுற்றறிக்கை இலக்கம்:** 02 - 176/2014 **திகதி:** 19.12.2014

பொலிஸ் மா அதிபர்,
பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு – 01.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மது வரித் திணைக்களம்,
இல.34, W.A.D ராமநாயக்கா மாவத்தை,
கொழும்பு – 02.

சகல பிரதிப்பணிப்பாளர் நாயகம் சுகாதார சேவை,

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

நிறுவனத் தலைவர்கள்,

**பழைய, புதிய சிகரெட் இருப்புகள் தொடர்பில் NATA சட்டத்தின் கீழ் படத்துடன் கூடிய சுகாதார எச்சரிக்கைகள் ( பெயரிடல், பொதியிடல் ) தொடர்பான ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்.**

இது 04.03.2013ஆம் திகதிய எமது முன்னைய கடிதம் தொடர்பானது;

பெயரிடல், பொதியிடல் சுகாதார எச்சரிக்கைகள் தொடர்பான ஒழுங்கு விதிகள் 08.08.2012ஆம் திகதிய 1770/15ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் முதன் முதலாக வெளியிடப்பட்டது. அது 336/12 எனும் இலக்கமுடைய மனு ஒன்றின் மூலம் இலங்கை புகையிலை பொது வரையறுக்கப்பட்ட கம்பனியால் (Ceylon Tubacco PLC) சவாலுக்குட்படுத்தப்பட்டது. மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்துரைக்கப்பட்ட படங்களுடனான சுகாதார எச்சரிக்கையினை 80% வீதத்திலிருந்து 50% - 60% வரை இடப்பரப்பினைக் குறைப்பதற்கு 12.05.2014இல் கட்டளை பிறப்பித்தது. CTC மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மேற்படி கட்டளைக்கு எதிராக SC/CPL/LA/85/2014 எனும் இலக்கமுடைய வழக்கு ஒன்றினை உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தது. 08.08.2012 மற்றும் 15.02.2013ஆம் திகதிய அரச வர்த்தமானிகள் இரத்துச் செய்யப்பட்டு, 27.05.2014ஆம் திகதிய 1864/32ஆம் இலக்க அரச வர்த்தமானியில் ஒழுங்கு விதியொன்றினைப் பிரசுரித்ததன் மூலம் குறித்துரைக்கப்பட்ட படவிளக்கமானது சிகரெட் பெட்டிகளின் முன், பின் பக்கங்களில் 60% வீதத்தை மேவியிருக்க வேண்டுமென பிரசுரிக்கப்பட்டதன் பேரில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பு அமைச்சினால் பின்பற்றப்பட்டது.

மேற்கூறப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதும், CTC மற்றும் அவர்களது விநியோகத்தர்களும் சொல்லப்பட்ட வர்த்தமானியின் உள்ளடக்கத்தை ஒன்றில் முற்றாக நீக்கும் படி அல்லது அதனுடன் இணங்கிப் போவதற்கு அவர்களுக்கு மேலதிக கால அவகாசம் வழங்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் SC/FR/ 164/14 மற்றும் SC/FR/ 165/14 எனும் இலக்கத்தையுடைய இரண்டு வழக்குகளைத் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்குகளில் இரண்டு தரப்பினருக்குமிடையில் 11.07.2014ஆம் ஆண்டு அன்று எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைவாக உச்ச நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றில் நடைபெற்றுக் கொண்டிருந்த சகல வழக்குகளையும் CTC நிறுவனம் வாபஸ் பெற வேண்டும் மற்றும் சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதியை இணங்கி ஒழுகுமுகமாக ஆறு (06) மாத கால அவகாசம் வழங்க வேண்டும் என்றும் உடன்பாடு ஒன்று எட்டப்பட்டது. சொல்லப்பட்ட வழக்குகள் தள்ளுபடி செய்யப் பட்டதுடன் நீதிமன்ற கட்டளைப்படி:-

1) CTC நிறுவனம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் 08.08.2012ஆம் திகதியில் 1770/15 எனும் இலக்கமுடையதும், 27.05.2014ஆம் திகதிய 1864/32 எனும் இலக்கமுடையதுமான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்களுடன் இணங்கி ஒழுகுதல் வேண்டும் என்பதுடன் பட விளக்க சுகாதார எச்சரிக்கை தொடர்பிலான இணக்கப்பாட்டுக்கான புதிய திகதி 01.01.2015ஆக இருக்கும்.

2) தற்போது விநியோகத்தர்களிடம் உள்ள சகல பழைய இருப்புகளும், சொல்லப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய குறித்த படங்களுடனான சுகாதார எச்சரிக்கையை உள்ளடக்காமல் 31.01.2015இன் பின்னர் விற்பனைக்காக, விற்பனை களஞ்சியத்திற்கு வழங்குவதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது இடம்பெயர்வதற்கு வைத்திருக்கக்கூடாது.

3) பழைய இருப்புகள் தொடர்பாக, அவற்றை 31.01.2015 வரைக்கும் விற்கமுடியும், விற்பனைக்காக வழங்க முடியும், விநியோகிக்கவாம், களஞ்சியப்படுத்தலாம் அவ்வது இடங்களுக்கு மாற்ற முடியும். ஆகையால் சகவ உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், சில்லறை வியாபாரிகள், களஞ்சிய காப்பாளர்கள், முகவர்கள் அல்லது விற்பனையாளர்கள் ஆகியோர் 01.02.2015இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் முழு சிகரெட் பொட்டலங்கள், பொதிகள், அட்டைப் பெட்டிகள் (புதிய, பழைய இருப்புகள்) தொடர்பில் மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதியுடன் இணங்கி செயற்படுதல் வேண்டும்.

4) எனவே 31.12.2014இன் பின்னர் உற்பத்தி செய்யப்படும் சிகரெட் பெட்டி 01.01.2015இல் இருந்து அமுலுக்கு வரும் வகையில் சொல்லப்பட்ட ஒழுங்கு விதியுடன் இணங்கியிருத்தல் வேண்டும் என்பதுடன் மேலே கூறப்பட்ட ஒழுங்குவிதிகளை சித்தரிக்கும் பரிந்துரைக்கப்பட்ட படத்துடன் கூடிய சுகாதார எச்சரிக்கையைக் கடைப்பிடிக்காத சிகரெட்டுகளை விற்பனை செய்யவோ, விற்பனைக்காக வழங்கவோ, களஞ்சியப்படுத்தவோ, விநியோகிக்கவோ அல்லது இடத்துக்கிடம் இடமாற்றவோ முடியாது. மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளை சம அளவில் எல்லா இறக்குமதியாளர்களும் இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

ஆகவே இணங்கி ஒழுகுவதற்கான புதிய திகதி இல 1864/27 இலக்கமுடைய 14.10.2014ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட புதிய ஒழுங்கு விதியின் பிரகாரம் 01.01.2015 ஆகும்.

மேலும் 08.08.2012ஆம் திகதியுடைய 1770/15ஆம் இலக்க மேற்கூறப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 27.05.2014ஆம் திகதிய 1864/32ஆம் இலக்க மற்றும் 14.10.2014ஆம் திகதிய 1884/27ஆம் இலக்க அதனது திருத்தங்கள் என்பன 336/2012 எனும் இலக்க CA (எழுத்தாணை) விண்ணப்பத்தின் மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பின்படி படத்துடன் கூடிய சுகாதார எச்சரிக்கை 01.01.2015ஆம் திகதியிலிருந்து செயற்படும் வகையில் மேற்கூறியவற்றிற்கு அமைவாக முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஆகையால், உமது அதிகார எல்லையின் கீழ் வரும் NATA இன் அதிகாரமளிக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் (பொலிஸ் அதிகாரிகள், மது வரி உத்தியோகத்தர்கள் அல்லது பொது சுகாதார அதிகாரிகள் மற்றும் உணவு மருந்து பரிசோதகர்கள் என்போர்) அதன்படி செயற்படுவதற்கு அறிவுறுத்தும் படி தயவு செய்து கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சுதர்மா கருணாரத்ன**
**சுகாதார செயலாளர்**

**பிரதிகள் :**

1. கௌரவ சுகாதார அமைச்சர்
2. செயலாளர், நீதி அமைச்சு
3. சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம்
4. செயலாளர், விமான, சிவில், விமானப் போக்குவரத்து அமைச்சு
5. கௌரவ சட்டமா அதிபர், சட்டமா அதிபதி திணைக்களம்
6. பணிப்பாளர் நாயகம், சுங்கத் திணைக்களம்
7. தலைவர், நுகர்வோர் அதிகார சபை
8. தலைவர், துறைமுக அதிகார சபை
9. இறக்குமதிக் கட்டுப்பாட்டாளர்
10. பிரதம உள்ளக கணக்காய்வாளர்
11. பிரதம சட்ட அலுவலர்
12. பணிப்பாளர், தொற்றா நோய்ப்பிரிவு
13. பணிப்பாளர் மருத்துவ தொழில்நுட்ப விநியோகம்.